**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.585/2022**
**Prosecution Witnesses: 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பானுபிரியா | Caste | : |
| Father Name/ Husband Name | : நாகராஜன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(2,3 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(16.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 விஜயலட்சுமி எனது உடன்பிறந்த தங்கை ஆவார். ஆஜர் எதிரி பாண்டியம்மாள் எனது தங்கையின் மாமியார் ஆவார். மற்றொரு எதிரி சங்குராஜ் எனது தங்கையின் நாத்தனார் கணவர் ஆவார். 1வது எதிரி பால்பாண்டி எனது தங்கையின் கணவர் ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எனது தங்கைக்கு திருமணமாகி 15 வருடங்கள் ஆகிறது. திருமணமான முதல் 1வது எதிரி பால்பாண்டியுடன் எனது தங்கை அவரது ஊரில் குடியிருந்து வந்தார். அவர்கள் அங்கு குடியிருந்த போதுஅவர்களுக்குள் சண்டை நடந்தது. அதன் பின்பு எனது தங்கை வந்து குடியிருந்தார். எனது அப்பா வீட்டில் எனது தங்கை அவரது இரண்டு மகன்களுடன் குடியிருந்து வருகிறார். இந்நிலையில் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு 1வது எதிரி அவரது மகன்களை பார்க்க வந்த போது

சண்டை நடந்தது. சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். மற்ற படி சம்பவம் குறித்து தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது எனது தங்கை 1வது எதிரியுடன் திருமணம் முடிந்து 1வது எதிரியுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார் என்றும் அ.சா.1 ன் நகையை அடகு வைத்ததை திருப்புதற்காக சாட்சி ஜோதிமலர் என்பவரிடம் ரூ.10000/- கடனாக வாங்கியுள்ளார் என்றும் அந்த கடனை அடைப்பதற்காக 1வது எதிரியிடம் அ.சா.1 பணம்கேட்டதற்கு 1வது எதிரி பணம் கொடுக்க முடியாது என்றம் உன் அம்மா வீட்டு சொத்து விற்று பணத்தை திருப்பி கொடு என கூறினார் என்றும் இந்நிலையல் 16.07.2017 அன்று காலை 11.30 மணிக்கு சாட்சி ஜோதிமலர் அவரது பணத்தை கேட்டு வந்த போது 1வது எதிரி அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி 2வது எதிரி அ.சா.1 ஐ பிடித்துக்கொள்ள 1,3 எதிரிகள் சேர்ந்து அ.சா.1 ஐ கொத்தனார் கரண்டியால் அடித்துக்காயம் ஏற்படுத்தினார்கள் அ.சா.1 உடல் மற்றும் மனரீதியாக கொடுமைப் படுத்தினார்கள் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.585/2022**
**Prosecution Witnesses: 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ராஜசேகர்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **ராஜேந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(2,3 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(16.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஜயலட்சுமி எனது பக்கத்து வீட்டைச் சார்ந்தவர் ஆவார். ஆஜர் எதிரி பாண்டியம்மாள் அ.சா.1ன் மாமியார் ஆவார். மற்றொரு எதிரி சங்குராஜ் எனது தங்கையின் நாத்தனார் கணவர் ஆவார். 1வது எதிரி பால்பாண்டி எனது தங்கையின் கணவர் ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. சிவரக்கோட்டையில் உள்ள 1வது எதிரிக்கும் அ.சா.1க்கும் சண்டை நடந்தது. நான் சத்தம் போட்டு வந்தேன். எதிரிகள் வீட்டில் வைத்து நடந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது எனது தங்கை 1வது எதிரியுடன் திருமணம் முடிந்து 1வது எதிரியுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார்

என்றும் அ.சா.1 ன் நகையை அடகு வைத்ததை திருப்புதற்காக சாட்சி ஜோதிமலர் என்பவரிடம் ரூ.10000/- கடனாக வாங்கியுள்ளார் என்றும் அந்த கடனை அடைப்பதற்காக 1வது எதிரியிடம் அ.சா.1 பணம்கேட்டதற்கு 1வது எதிரி பணம் கொடுக்க முடியாது என்றம் உன் அம்மா வீட்டு சொத்து விற்று பணத்தை திருப்பி கொடு என கூறினார் என்றும் இந்நிலையல் 16.07.2017 அன்று காலை 11.30 மணிக்கு சாட்சி ஜோதிமலர் அவரது பணத்தை கேட்டு வந்த போது 1வது எதிரி அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி 2வது எதிரி அ.சா.1 ஐ பிடித்துக்கொள்ள 1,3 எதிரிகள் சேர்ந்து அ.சா.1 ஐ கொத்தனார் கரண்டியால் அடித்துக்காயம் ஏற்படுத்தினார்கள் அ.சா.1 உடல் மற்றும் மனரீதியாக கொடுமைப் படுத்தினார்கள் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.**

1வது எதிரி குழந்தையை பார்க்க வரும்போது அ.சா.1 மறுத்ததால் இருவருக்கும் வாய்தகராறு தான் ஏற்பட்டது. சண்டையில்லை.

**மறுவிசாரணை.** இல்லை